www.Padasalai.Net

**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–இன்படி அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2011–2012–ஆம் கல்வியாண்டில் பள்ளிக்கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டது – இப்பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 30.06.2029 வரை ஐந்தாண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி [ பக5(1) ] த்துறை**

**அரசாணை (1டி.) எண்.175**

**நாள்.31.07.2024**
**திருவள்ளுவர் ஆண்டு 2055,**
**குரோதி வருடம், ஆடி – 15**

**படிக்கபட்டவை :–**

01/8/2024

1. அரசாணை (நிலை) எண்.193, பள்ளிக் கல்வி(வ.செ.2)த்துறை, நாள் 02.12.2011.
2. அரசாணை (1டி.) எண்.224, பள்ளிக் கல்வித்[பக(5(1)]துறை, நாள் 12.08.2022.
3. அரசுக் கடித எண்.4587/ப.க5(1)/2023–1, நாள்.28.04.2023.
4. அரசுக் கடித எண்.9040/ப.க5(1)/2023–2, நாள்.27.07.2023.
5. அரசுக் கடித எண்.866/ப.க5(1)/2024–1, நாள்.12.02.2024.
6. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.000506/எல்/இ3/2022, நாள். 02.07.2024.

---------------

**ஆணை :–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பிறவற்றினிடையே குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–இன்படி, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2011–12 ஆம் கல்வி ஆண்டில், பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலே, இரண்டவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காண் 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2022 முதல் 31.12.2022 வரை ஓராண்டிற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. பள்ளிக் கல்வி ஆணையரின் 11.01.2023 நாளிட்ட செயல்முறைகளில் இப்பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.03.2023 வரை மூன்று மாதத்திற்கு விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டது. பார்வை 3 முதல் 5 வரை உள்ள அரசு கடிதங்களில் இப்பணியிடங்களுக்கு 01.04.2023 முதல் 30.06.2024 வரை ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டது.

3. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009– இன்படி, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2011–2012 –ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்டு பள்ளிக் கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான ஊதிய

www.Padasalai.Net

கொடுப்பானை 30.06.2024 உடன் முடிவடைந்துள்ளதால், இப்பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 31.12.2024 வரை 6 மாத காலத்திற்கு ஊதியக் கொடுப்பாணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009இன்படி, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2011–2012–ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்டு, பள்ளிக்கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கான 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு 01.07.2024 முதல் 30.06.2029 வரை ஐந்தாண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–4 இல் பணியிட நீட்டிப்பு வழங்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> "2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநில செலவினங்கள் – AZ– அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுத்தல் – 301 சம்பளங்கள். (த.தொ.கு. 2202 02 109 AZ 30100)"

6. மேற்படி செலவினம் அனைவருக்கும் கல்வித் திட்ட நிதியிலிருந்து உடனுக்குடன் திரும்ப பெறப்பட்டு, கீழ்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்:–

> "0202 கல்வி, போட்டி, விளையாட்டுகள், கலையும் பண்பாடும் – 01 பொதுக்கல்வி – 102 – இடைநிலைக்கல்வி AK அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு தொகை வழங்குவதற்கான வரவினங்கள். (த.தொ.கு. 0202 01 102 AK 0009)"

7. இவ்வாணை, இத்துறையின் மின்கோப்பு எண். 7081/ப.க5(1)/2024, நாள் 27.07.2024 இல் நிதித்துறையிடம் பெற்று இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ. மதுமதி,
அரசு செயலாளர்.

**பெறுநர்**
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
**நகல்**
நிதித் (கல்வி–II) / (வ.செ.பொ.I & II) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் (வ.செ./தொ.க3/அநமு) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

31/7/24
அரசு சார்புச் செயலாளர்
31/7/2024

www.Padasalai.Net

**இணைப்பு**

**அரசாணை(1டி) எண். 175, பள்ளிக் கல்வி [பக5(1)]த்துறை, நாள்: 31.07.2024**

2011-2012ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு பள்ளிக் கல்வித்துறையில் அரசு உயர்நிலை/ நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 1282 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களின் மாவட்ட வாரியான மற்றும் பாடவாரியான விவரம் :-

பழைய ஊதிய விகிதம் ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ.4600/-
**(புதிய ஊதிய விகிதம் : நிலை -16, ரூ.36,400-1,15,700)**

| | |
|---|---|
| பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை. | அரசாணை(நிலை)எண்.193, பள்ளிக்கல்வி (வ.செ.2)த் துறை, நாள் 02.12.2011. |
| கடைசியாக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம். | அரசாணை (1டி) எண். 224, பள்ளிக் கல்வி [பக5(1)]த் துறை, நாள்.12.08.2022. (01.01.2022 முதல் 31.12.2022 வரை) |
| **தற்போது தொடர் நீட்டிப்பு வழங்கப்படும் காலம்.** | **01.07.2024 முதல் 30.06.2029 வரை** |

| வரிசை எண் | மாவட்டம் | அறிவியல் (ம)கணிதம் | சமூக அறிவியல் | மொழிப் பாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 2 | 2 | 2 | 6 |
| 2. | கோயம்புத்தூர் | 71 | 71 | 71 | 213 |
| 3. | தர்மபுரி | 24 | 24 | 23 | 71 |
| 4. | திண்டுக்கல் | 1 | - | - | 1 |
| 5. | ஈரோடு | 31 | 31 | 30 | 92 |
| 6. | காஞ்சிபுரம் | 18 | 18 | 18 | 54 |
| 7. | கரூர் | 1 | 1 | 1 | 3 |
| 8. | கிருட்டிணகிரி | 19 | 19 | 19 | 57 |
| 9. | மதுரை | 24 | 24 | 24 | 72 |
| 10. | நாகப்பட்டினம் | 15 | 15 | 15 | 45 |
| 11. | நாமக்கல் | 5 | 5 | 4 | 14 |
| 12. | பெரம்பலூர் | 8 | 8 | 8 | 24 |
| 13. | புதுக்கோட்டை | 17 | 17 | 16 | 50 |
| 14. | சிவகங்கை | 11 | 11 | 11 | 33 |
| 15. | தேனி | 4 | 4 | 3 | 11 |
| 16. | திருச்சி | 7 | 7 | 7 | 21 |
| 17. | திருநெல்வேலி | 7 | 7 | 7 | 21 |
| 18. | திருவள்ளூர் | 23 | 23 | 23 | 69 |
| 19. | திருவாரூர் | 19 | 19 | 19 | 57 |
| 20. | திருவண்ணாமலை | 22 | 22 | 22 | 66 |
| 21. | தூத்துக்குடி | 7 | 7 | 7 | 21 |
| 22. | வேலூர் | 35 | 35 | 35 | 105 |
| 23. | விழுப்புரம் | 57 | 57 | 56 | 170 |
| 24. | விருதுநகர் | 2 | 2 | 2 | 6 |
| | **மொத்தம்** | **430** | **429** | **423** | **1282** |

சோ.மதுமதி,
அரசுச் செயலாளர்.

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்

www.Padasalai.Net

நகல்:-

அரசாணை (1டி) எண்: 175/பள்ளிக் கல்வி (பக5(1))த் துறை நாள்:- 31.07.2024

இயக்குநரக ந.க.எண்:-000506/என்/இ3/2022 நாள்:- 01.08.2024

தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது

இணை இயக்குநர்
01/08/2024

பெறுநர்:-
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,